(ஆ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு சிறு இனம்கள் (எடுத்து விடுதல், ரயத்து வாரியாக மாற்றுதல்) திருத்த சட்டமுன்வடிவு.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு 1971-ம் ஆண்டு சிறு இனம்கள் (எடுத்து விடுதல், ரயத்துவாரியாக மாற்றுதல்) திருத்த சட்டமுன்வடிவை இப்பேரவையில் அறிமுகம் செய்ய அனுமதி கோருகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: துணைத் தலைவர் அவர்களே, இச் சட்ட முன்வடிவை அறிமுகம் செய்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டிருக்கிறது.

(இ) தமிழ்நாடு 1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1971).

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் துணைத் தலைவரவர்களே, "1971-ம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 2) சட்டமுன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண் 32/1971) ஆய்விற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

*** திருமதி த. ந. அனந்தநாயகி:** பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்த நிதி ஒதுக்கல் தீர்மானத்தின்மீது இன்னும் ஒரு சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். காரணம், சில கருத்துக்கள் 'டிமாண்டு'-களில் விடப்பட்டு விட்டதால் இப்போது அவற்றைக் கூறவேண்டும் என்று விரும்புகிறேன்.

முதலில் தியாகிகளுக்கு என வழங்கப்படும் உதவிப் பணம் சம்பந்தமாக இவ்வரசாங்கத்தின் கவனத்தினை ஈர்க்க விரும்புகிறேன். காரணம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள், 'நாங்கள் தியாகிகளுக்கு தாராளமாக உதவித் தொகைகளை வழங்குகிறோம்' என்று. தொகையையும் குறிப்பிட்டார்கள், 'ரூபாய் 47 லட்சம் இதற்கெனச் செலவழிக்கிறோம்' என்று. உண்மையிலேயே இதற்காக அவர்களைப் பாராட்டுகிறேன். ஆனால் இன்னும் சிலர் விடுபட்டுப் போயிருக்கிறார்கள். 31—3—1970-க்குப்பிறகு புதிதாக யாருக்கும் கொடுக்கப்படப் போவதில்லை. புதிதாக அப்ளிகேஷன் போட்டாலும் அவர்களுக்கும் கிடையாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போது ஏறத்தாழ ஐயாயிரம் அல்லது ஆறாயிரம் பேருக்குத் தொகைகளைக் கொடுத்துக் கொண்டு வருகின்றார்கள். விடுபட்டுப்போயிருப்பவர்களின் எண்ணிக்கை மிக மிகக் குறைவாகத்தான் இருக்கும். மிஞ்சிப்போனால் ஒரு ஆயிரம் பேருக்கு மேல் இருக்கமாட்டார்கள். இவர்களுக்காகவும் கொஞ்சம் செலவழித்தால் நியாயமாகவும், தர்மமாகவும் இருக்கும். அவர்கள் அன்றைக்குச் செய்த தியாகத்தின் பலனைத்தான் இன்றைக்கு நாட்டிலே ஜனநாயக ஆட்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து எஞ்சியுள்ள ஒரு ஆயிரம் பேருக்கும் தியாகிகள் பென்ஷனை அளிக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.